நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## "மணிலாவில் கூடுதல் மகசூல் பெற ஊட்டச்சத்து கரைசல் தெளிக்கலாம்'

First Published : 01 Mar 2012 12:24:19 AM IST



கடலூர்: இறவை மணிலா பயிரில் கூடுதல் மகசூல் பெறுவதற்கு ஊட்டச்சத்து கரைசல் தெளிக்கும் முறையை வேளாண் பல்கலைக்கழகம் தற்போது தீவிரமாக வலியுறுத்தி வருகிறது.

தமிழகத்தில் அனைத்து பருவங்களிலும் சேர்த்து 4.13 லட்சம் ஹெக்டேரில் மணிலா பயிரிடப்படுகிறது. கார்த்திகை பட்டத்தில் மானாவாரியில் 2.57 லட்சம் ஹெக்டேரிலும் இறவை பாசனத்தில் 1.56 லட்சம் ஹெக்டேரிலும் மணிலா பயிரிடப்பட்டு உள்ளது.

நடப்புப் பருவத்தில் (கார்த்திகை பட்டம்) கடலூர் மாவட்டத்தில் 22 ஆயிரம் ஏக்கரில் இறவை மணிலா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடலூர், குறிஞ்சிப்பாடி பண்ருட்டி, அண்ணா கிராமம், விருத்தாசலம், கம்மாபுரம் வட்டாரங்களில் மணிலா அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் மணிலா அறுவடைக்கு வரும்.

தற்போது உள்ள இறவை மணிலா பயிருக்கு ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்க முடியும், மணிலா பருப்பு திரட்சியாக உருவாகி விதைத் தரம் அதிகரிக்கும் என்றும் வேளாண் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். ஊட்டச்சத்து கரைசல் தெளித்தல் குறித்து கடலூர் வேளாண் இணை இயக்குநர் எம்.ராதாகிருஷ்ணன் கூறியது:

இறவை மணிலா பயிரில் கூடுதல் மகசூல் பெறவும் திரட்சியான பருப்பைப் பெறவும் இலைவழியாக ஊட்டச்சத்தை பெறுவதற்கு ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பு அவசியமாகிறது. ஒரு

ஏக்கர் மணிலாவுக்கு ஊட்டச்சத்து கரைசல் தயாரிப்புக்கு, டி.ஏ.பி. உரம் ஒரு கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம், போரக்ஸ் (வெண்காரம்) 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் ஒன்றாகக் கலந்து, ஒரு இரவு முழுவதும் வைத்து இருக்க வேண்டும்.

மறுநாள் காலையில் இக்கலவையை வடிகட்டினால், 13 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து கரைசல் நீர் கிடைக்கும். இதை 187 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து, 200 லிட்டர் என்ற அளவில், கரைசலைத் தயார் செய்ய வேண்டும். தேவைப்பட்டால் பிளானோபிக்ஸ் 140 மில்லி சேர்த்து, விதைத்து 25 நாள்களில் ஒருமுறையும், 10 நாள் இடைவெளியிட்டு 35-ம் நாள் ஒரு முறையும் மணிலா செடிகளில் தெளிக்க வேண்டும்.

எனவே இறவை மணிலா சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கூடுதல் மகசூலும் கூடுதல் விலையும் கிடைத்திட ஊட்டச்சத்து கரைசல் தெளித்துப் பயன் அடையுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள். தேசிய வேளாண் அபிவிருத்தி6த் திட்டத்தில், மணிலா ஊட்டச்சத்து கலவை பைகள் 50 சதவீதம் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண் அலுவலர்களை அணுகலாம். மேலும் இறவை மணிலாவுக்கு வளர்ச்சிப் பருவத்தில் சரியான தருணத்தில் ஜிப்சம் இடுவதால் பொக்கு இல்லாமல் மணிலா திரட்சியான பருப்பு உண்டாகவும் காய் பிடிப்புத் திறனும் அதிகரிக்கும். ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட வேண்டும். இதில் 80 கிலோவை அடியுரமாக இடவேண்டும். பயிர் வளர்ச்சிப் பருவத்தில் விதைப்பு செய்த 40 முதல் 45 நாள்களில், 2-வது களை எடுக்கும் தருணத்தில் 80 கிலோ ஜிப்சம் இட்டு செடிகளை சுற்றி நன்றாகக் கொத்திவிட்டு, மண் அணைக்க வேண்டும் என்றார் இணை இயக்குநர்.

## கரும்பைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

First Published : 01 Mar 2012 12:23:17 AM IST



இடைக்கணு புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட கரும்பில் காணப்படும் அறிகுறிகள்.

புதுச்சேரி: தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதியில் கரும்பு அதிகம் பயிரிடப்படுகிறது. இதனை முறையாகப் பராமரித்தால் பூச்சித் தாக்குதலில் இருந்து கருப்பு பயிரைக் காப்பாற்றலாம்.

கரும்பு நடவு செய்து 12 மாதங்கள் கழித்து அறுவடை செய்யப்படுகிறது. நடவு செய்த ஒரு மாதத்திலேயே பூச்சித் தாக்குதல் கரும்பில் ஆரம்பிக்கும். கரும்பைப் பொறுத்த வரை

இளம் குருத்துப் புழு, இடைக்கணு புழு, நுனிகுருத்துப் புழு ஆகிய 3 விதமான பூச்சிகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றன.

முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மருந்துகள், பொறிகள் உபயோகிப்பதன் மூலம் இந்த பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

இது குறித்து பெருந்தலைவர் காரமாராஜர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் வல்லுநர் முனைவர் என்.விஜயகுமாரிடம் கேட்ட போது அவர் கூறியது:

கரும்பு நடவு செய்த ஒரு மாதம் முதல் 3 மாதம் வரை இளம் குருத்துப் புழு தாக்குகிறது. அதன் பின்னர் இடைக்கணு புழுக்கள் தாக்கும்.

இளம் குருத்துப் புழு: இவ்வகை புழுக்கள் இளம் குருத்தின் தண்டைத் துளைத்து நடுப்பக்கத்துக்குச் சென்று சாறை உறிஞ்சும். இதனால் மகசூல் பாதிக்கப்படும். சில சமயங்களில் நடுக்குருத்து காய்ந்து கரும்புச் செடி இறந்துவிடும்.

இவ்வகையான பூச்சித் தாக்குதல் கரும்புப் பயிர்களில் திட்டு திட்டாகக் காணப்படும். சோலைகளை உறிப்பதன் மூலமும், மண் வெப்பமாகாமல் தண்ணீர் பாய்ச்சுவதன் மூலமும் இவ்வகை பூச்சிகளை வராமல் செய்யாலம்.

தடுப்பு முறைகள்: தாய் பூச்சியைக் கட்டுப்படுத்தினால் இளம் குருத்துப் புழு உருவாகாது. இனக் கவர்ச்சி பொறியை ஏக்கருக்கு 5 வைத்து தாய் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். இதற்காக ரூ.150 மட்டுமே செலவாகும்.

இதேபோல் ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி அமைத்தும் கட்டுப்படுத்தலாம். விளக்கு பொறியை மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே அமைக்க வேண்டும். இந்த நேரத்தில்தான் தீமை செய்யும் பூச்சிகள் அதிகம் இருக்கும்.

மற்ற நேரங்களில் விளக்கு பொறி அமைத்தால் அதில் நன்மை செய்யும் பூச்சிகளும் சிக்கி கொள்ளும். விளக்கு பொறி அமைக்கும் போது அதற்குக் கீழே நீரும், அதில் சில சொட்டுகள் மண்ணெண்ணெய் கலந்தும் வைக்க வேண்டும்.

இவை இல்லாமல் நீர்பொறி அமைத்தும் இவ்வகை பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். இந்த நீர்பொறிகளை ஒரு ஏக்கருக்கு ஐந்து வைக்க வேண்டும். நீர்பொறி அமைக்க ஏக்கருக்கு ரூ.165 மட்டுமே செலவாகும்.

முட்டைகள் வைத்து விட்டால் டிரரெக்கோ கிராமா என்ற ஒட்டுண்ணி அட்டைகளை ஒரு ஏக்கருக்கு 6 அட்டைகள் வைத்து கட்டுப்படுத்தலாம். மேலும் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்

புண்ணாக்கை மண்ணில் இட்டும் கட்டுப்படுத்தலாம். கார்போ பியூரான் 100 சதவீத குருணை மருந்தை ஒரு ஏக்கருக்கு 6 கிலோ இட்டும் கட்டுப்படுத்தலாம்.

இடைக்கணு புழு: நடவு செய்த மூன்று மாதங்களில் இருந்து இடைக்கணு புழு உருவாகும். இரு கணுக்களுக்கு இடைய நுழைந்து நீரை உறிஞ்சும். இதனால் மகசூல் பாதிக்கப்படும். அதிக அளவில் பக்க கிளைகள் உண்டாகும்.

ஏப்ரல், மே மாதங்களில் இவ்வகை பூச்சிகளின் தாக்குதல் அதிகம் இருக்கும்.

ஒரு ஏக்கருக்கு 100 கிலோ தரமான வேப்பம் புண்ணாக்கை இட்டு கட்டுப்படுத்தலாம். இதனை ஸ்டிரைக்கோ கிராம என்ற ஒட்டுண்ணி அட்டைகளை ஏக்கருக்கு 6 அட்டைகளை பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு 2 லிட்டர் வேப்பம் எண்ணெய், காதி சோப்(200 கிராம்) ஆகியவற்றை கரும்பின் மேல் பகுதியில் தெளித்து பூச்சித் தாக்குதல் வருவதற்கு முன்பே கட்டுப்படுத்தலாம்.

பூச்சி தாக்கியிருந்தால் ஒரு ஏக்கருக்கு 400 மி.லி. கியூரா கிரான் என்ற பூச்சி மருந்து தெளிக்க வேண்டும். இது நெடி உடையது. இதனைத் தெளிப்பவர்கள் மூக்கில் துணி கட்டிக் கொள்ள வேண்டும். இந்த மருந்தைக் கணுக்களில் படும் வகையில் தெளிக்க வேண்டும்.

நுனி குருத்துப் புழு: இந்த பூச்சித் தாக்குதல் தமிழகம், புதுச்சேரி பகுதிகளில் அதிகம் இல்லை. இவ்வகை பூச்சிகள் தாக்கினால் நுனிப்பகுதிகள் கருகும். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இவற்றின் தாக்குதல் இருக்கும். கரும்பு நடவு செய்து 120 நாள்களுக்கு பிறகு, வெப்பம் அதிகம் இருக்கும் நேரங்களில் இப்பூச்சிகள் தாக்கும்.

புயல் போன்றவற்றால் தட்பவெட்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற பூச்சிகள் தாக்கினால் ஓரு ஏக்கருக்கு டிரைக்கே கிராம் ஜப்பானிசம் என்ற ஒட்டுண்ணி அட்டையை 6 வைத்துக் கட்டுப்படுத்தலாம். ஒட்டுண்ணி அட்டை ஒன்றில் 6 பிரித்து எடுக்கலாம்.

இதுபோல் 6 அட்டைகளில் இருந்து 36 அட்டைகளை பிரித்து எடுத்து 36 இடங்களில் கட்ட வேண்டும் என்றார்.

## விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு திரும்ப வேண்டும்

First Published : 29 Feb 2012 12:59:00 PM IST

தருமபுரி, பிப். 28: விவசாயிகள் அனைவரும் இயற்கை வேளாண்மைக்கு திரும்ப வேண்டும் என தருமபுரியில் திங்கள்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் சார்பில், அக்கறை அறக்கட்டளையுடன் இணைந்து பெண்ணையாறு வடிநிலப்படுகை, கம்பைநல்லூர் உபவடி நிலப்படுகையைச் சேர்ந்த

விவசாயிகள், வேளாண் தொழில்முனைவோர், தன்னார்வலர்களுக்காக இக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கை, பெண்ணையாறு வடிநிலப்படுகை உதவி செயற்பொறியாளர் நடராஜன் தொடக்கி வைத்தார். சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் மாற்றுத் திட்டங்கள் என்ற தலைப்பில் அக்கறை அறக்கட்டளை தலைவர் சி.மா. பிரிதிவிராஜ் பேசியது:

அன்றாடத் தேவைகள் அனைத்திலும் ரசாயன பொருள்கள் பயன்பாடு அதிகரித்துள்ளதால் உணவு, பால், நீர் ஆகியவை நச்சுத்தன்மையாக மாறி வருகின்றன. நீராதாரங்கள் கேள்விக்குறியாகிவிட்டன.

பசுமைப் போர்வை குறைந்து, சுற்றுச்சூழலும் மாசுபட்டுவிட்டது. பருவநிலைகளும் மாறிவிட்டன. இதன் காரணமாக புயல், சுனாமி உள்ளிட்ட இயற்கை சீற்றங்களுக்கு அடிக்கடி ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைத்தடுக்க விவசாயிகள் அனைவரும் இயற்கை வேளாண்மைக்கு திரும்ப வேண்டும். இயற்கை உரங்களைப் பயன்படுத்தி சாகுபடிகளை செய்வதால் செலவு குறைவதுடன், இயற்கை வகை உற்பத்தி பொருள்களுக்கு கூடுதல் விலையும் கிடைக்கிறது.உள்ளாட்சிகளில் தேங்கும் குப்பைகளை சரிவர கையாளாமல் இருப்பதாலும் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கலாம்.

சிமெண்ட் சாலை, தார்ச் சாலைகளில் ஊடுபொருளாகவும் பயன்படுத்தலாம். மறுசுழற்சி செய்து பயனுள்ள பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கலாம். மேலும், மக்கும் குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கலாம். அனைத்து உள்ளாட்சி நிர்வாகங்களும் இதை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

நீர்வள ஆதாரத்துறை உதவிப் பொறியாளர் சி. செந்தில்குமரன், இயற்கை வேளாண்மை அமைப்பின் தலைவர் கோ. புருஷோத்தமன் (வேலூர்), எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர் கோ. தொல்காப்பியன் (வேலூர்), தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்க நிர்வாகி நா. பார்த்திபன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## வெயிலால் எள் விளைச்சல் ஜோர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,01:08 IST

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில் நிலவும் கடும் வெயிலால் எள் பயிர் நன்றாக விளைந்துள்ளதாக மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிரான எள்ளில், கறுப்பு எள், வெள்ளை எள் என்ற இரு வகையான ரகங்கள் உள்ளன. நல்லெண்ணெய் உற்பத்தி மற்றும் மிட்டாய் ரகங்கள் உற்பத்தியில் எள் முக்கிய பங்கு வகிக்கிறது. சமையலுக்கு மட்டுமின்றி, சித்த மருத்துவத்திலும் நல்லெண்ணெய் அதிகம் தேவைப்படுகிறது. ஈரோடு மாவட்டம் கோபி, அந்தியூர், அறச்சலூர் வட்டாரத்தில் எள் சாகுபடி அதிகம் நடக்கிறது.

ஈரோடு, கணபதிபாளையத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில், விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளனர். தற்போது, ஈரோட்டில் வெயிலும், பனியும் கலந்த சீதோஷ்ண நிலை நிலவுவதால், எள் விளைச்சல் நன்றாக உள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

கணபதிபாளையம் விவசாயி செந்தில் கூறுகையில், ""ஈரோடு மாவட்டத்தின் மண் வளத்துக்கு ஏற்ற பயிர்களை விவசாயிகள் பயிர் செய்கின்றனர். கணபதிபாளையத்தில் எள் விளைச்சல் நன்றாக உள்ளதால், எள்ளை பயிரிட்டுள்ளோம். குறைந்த பராமரிப்பு செலவில், அதிக விளைச்சலையும், லாபத்தையும் தருவதால், ஈரோடு மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஏக்கரில் எள் நடவு செய்யப்பட்டுள்ளது. மூலிகை பயன்கள் கொண்ட எள்ளை, ஈரோடு, கரூர் பகுதியில் ஒழுங்குமுறை விற்பனை செய்வதால், அதிக லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்." என்றனர்.

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு கரும்பு பால் விற்பனை தூள்

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,01:09 IST

ஈரோடு: ஈரோடு மாநகரில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், கரும்பு பால் விற்பனை சூடுபிடித்துள்ளது.

ஈரோடு மாநகரப் பகுதியில் காலை 7 மணிக்கெல்லாம் சுள்ளென அடிக்கத் துவங்கும் வெயில்,

மாலை 6 மணி வரை வாட்டி வதைக்கிறது. மின்தடையால் பகல் நேரத்தில் ஃபேன் இயக்க முடியாமல், மக்கள் தவிக்கின்றனர். வெயிலுக்கு இதமாக, நுங்கு, இளநீர், ஐஸ் கிரீம், கம்மங் கூழ், நீர்மோர், பல்வேறு ஜூஸ்கள் ஆகியவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. இந்த வரிசையில் கரும்பு பால் முக்கிய இடம் பிடித்துள்ளது.
பிரப் ரோடு, மணிக்கூண்டு, காந்திஜி ரோடு, பெருந்துறை ரோடு, பஸ் ஸ்டாண்டு அருகில், வீரப்பன்சத்திரம் உள்பட மாநகரப் பகுதியில், 50க்கும் மேற்பட்ட இடங்களில் கரும்பு பால் கடைகள் மும்முரமாக இயங்குகின்றன.
கறும்பு பாலுடன், இஞ்சி, எலுமிச்சை பழத்தை சேர்த்து தருகின்றனர். ஜூஸ் வகைகளை சாப்பிட்டால் குறைந்தபட்சம் 15, 20 ரூபாய் தேவைப்படும். ஆனால், கரும்பு பால் விலை ஐந்து ரூபாய் மட்டுமே. பலரும், இரண்டு கிளாஸ் வாங்கி குடிக்கின்றனர்.

## விவசாய உற்பத்தி செய்வோருக்கு இயந்திர மானியம்

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,00:08 IST

பேரூர் : "விவசாய உற்பத்தி செய்வோருக்கு, இயந்திர மானியம் வழங்கப்படும்' என, வேளாண்துறை அமைச்சர் கூறினார்.
தொண்டாமுத்தூரில் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நடந்தது. ஒன்றிய செயலாளர் பார்த்திபன் வரவேற்றார்; ஒன்றிய தலைவர் மதுமதி முன்னிலை வகித்தார்.
எம்.எல்.ஏ., வேலுமணி பேசுகையில்,""மக்கள் நலத்திட்டங்கள் தடையின்றி நிறைவேற்றப்படுகின்றன.

மின்வெட்டுப் பிரச்னைக்கு பல்வேறு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதால், விரைவில் இப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும்" என்றார்.
வேளாண்அமைச்சர் தாமோதரன் பேசுகையில்,""முக்கியப் பிரச்னையான மின்வெட்டுக்கு, முந்தைய தி.மு.க., அரசுதான் காரணம். மின் பிரச்னைக்கு தீர்வுகாண தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அடுத்தாண்டுக்குள், தடையில்லா மின்சாரம் வழங்கப்படும். வேளாண் துறையில் பல்வேறு மானியங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. விவசாய உற்பத்திக்கு இயந்திரங்கள், மானியமாக வழங்கப்படுகின்றன,"என்றார்.
இரண்டு பேருக்கு மூன்று சக்கர சைக்கிள், 12 பேருக்கு தையல்மெஷின், 12 பேருக்கு இஸ்திரிபெட்டி, ஒருவருக்கு செயற்கைக்கால் கருவி, விழியிழந்தோர் பள்ளிக்கு பீரோ ஆகியவற்றை, அமைச்சர் வழங்கினார்.

தொகுதி செயலாளர் விஜயகுமார், மாவட்ட எம்.ஜி.ஆர்., மன்ற இணைச்செயலாளர் தீத்திபாளையம் கோவிந்தராஜன், பேரூராட்சி தலைவர் சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோடை சீசன் எதிரொலி : எலுமிச்சை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,01:34 IST

மதுரை :மதுரையில் கோடை சீசன் எதிரொலியாக, எலுமிச்சை விலை கிலோவிற்கு ரூ.20 வரை அதிகரித்தது. விலை உயர்வு ஏப்ரல் வரை நீடிக்கும்.

மதுரைக்கு சுற்றுப்பகுதிகளில் இருந்தும், தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள், ஆந்திரா மாநிலங்களில் இருந்தும் எலுமிச்சை வரத்துள்ளது. கடந்த மாதம் கிலோ ரூ.50 வரை விற்கப்பட்டது. சில்லரையில் ஒரு பழம் ரூ.2.50 வரை விற்கப்பட்டது. தற்போது வரத்து குறைவால் கிலோவிற்கு ரூ.20 வரை அதிகரித்தது.

யானைக்கல் வியாபாரி ராமலிங்கம் கூறியதாவது : கோடை சீசனால் டில்லி, கோல்கட்டாவிற்கு ஆந்திரா எலுமிச்சை பழங்கள் அதிகமாக அனுப்பப்படுவதால், மதுரைக்கு வரத்து குறைந்தது. கோடை வெயில் காரணமாக, பழம் அதிகம் தேவைப்படுவதால், கிலோ ரூ.70 வரையும், சில்லரையில் ஒரு பழம் ரூ.4 வரையும் விற்கப்படுகிறது. ஆண்டுதோறும் கோடை ஆரம்பிக்கும் முன், விலை உயருவது வழக்கம். ஏப்ரல் வரை விலை உயர்வு நீடிக்கும், என்றார்.

**மண்புழு கழிவு உரம் செயல் விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,01:46 IST

தென்காசி :மத்தளம்பாறையில் மண்புழு கழிவு உரம் தயாரிப்பது குறித்த செயல் விளக்க பயிற்சி நடந்தது.

தென்காசி அருகே மத்தளம்பாறையில் மண்புழு கழிவு உரம் தயாரிப்பது குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும்போது, இயற்கை உரங்கள் இடுவதன் அவசியம் பற்றியும், மண்புழு கழிவு உரம் இடுவதால் மண் வளம் பெருகி, பயிர் மகசூல் அதிகரிப்பது குறித்தும் விளக்கினார்.

உதவி வேளாண் அலுவலர் அன்சாரி மண்புழு கழிவு உரம் தயாரிக்கும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காட்டினார். திரளான விவசாயிகள் பயிற்சி பெற்றனர். விவசாயிகள் கல்ப விருச்சம் என்ற செயல் விளக்க பண்ணையை பார்வையிட்டனர்.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் அன்சாரி, குமார், மாரியப்பன், உதவி விதை அலுவலர்கள் முருகன், சுப்புராம் செய்திருந்தனர்.

## சுவை மிகுந்த குமரி புளி: விளைச்சல் இல்லாததால் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2012,02:11 IST

புதுக்கடை : கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைச்சல் பாதிப்படைந்துள்ளதால் புளி விலை உயர்ந்துள்ளது.
குமரி மாவட்டத்தில் பண்டை காலங்களிலே பொதுமக்கள் ஆர்வமாக புளிய மரங்களை நட்டனர். புளியமரங்கள் ஏப்ரல் மாத இறுதியில் பூ பூக்க துவங்கும். பின் பூக்கள் காயாகி தை மாத குளிரில் பழுக்க துவங்கும். மாசி மாதம் பழமாகும். பின் புளியை பறித்து, வெளிப்பகுதியை பொதிந்திருக்கும் தோடை உடைத்து, கொட்டை அகற்றி, காய வைத்து பக்குவப்படுத்தி தரமான புளியாக கடைகளில் விற்பனை செய்து வந்தனர். கால சூழ்நிலை மாற நிலங்களை ஆக்ரமித்து கொண்டிருந்த புளியமரங்கள் முறிக்கப்பட்டது. இதனால் புளியமரங்கள் குறையத்துவங்கியது. மேலும் பழைய காலங்களில் புளியமரங்களில் ஏறுவதற்கு ஆட்கள் இருந்தனர். தற்போது புளியமரம் ஏறுவதற்கு ஆட்கள் இல்லாத சூழ்நிலை உள்ளது.

இந்தியாவிலே மிகுதியான புளிப்புத்தன்மை உடைய புளி குமரி மாவட்டத்தில் கிடைக்கும் புளியாகும். குமரியில் விளையும் புளி சமையலுக்கு பயன்படுத்தினால் மிகவும் சுவையாக இருக்கும். எனவே அனைவரும் விரும்பும் புளியாக குமரிப்புளி உள்ளது. குமரிப்புளி கடந்த ஆண்டு கிலோ ஒன்றிற்கு 75 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது குமரிப்புளி ஒரு கிலோ 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆனால் கம்பம், ஆந்திராவில் உள்ள புளி ஒரு கிலோ 75 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
இதுகுறித்து சக்திநகரை சேர்ந்த வியாபாரி காளிதாஸ் கூறியதாவது: குமரி மாவட்டத்தில் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் வரை அதிக வருமானம் கிடைக்கும் மரங்களாக பனைமரம், புளியமரம் இருந்தது. புளியமரத்தில் இருந்து ஆண்டிற்கு ஒரு முறை வருவாய் கிடைக்கும். நாளடைவில் புளிய மரங்கள் வெட்டப்பட்டதால் புளி விளைச்சல் பாதித்துள்ளது. இந்த ஆண்டு குமரிப்புளி ஒரு கிலோ 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இவ்வாறு காளிதாஸ் கூறினார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,22:53 IST

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் கொத்தியார் கோட்டையில் பயிறு சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் இணை இயக்குனர் சக்திமோகன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர்கள் ராஜகோபால், முகமது அப்துல் நசீர் மற்றும் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர் தனதுரை, உதவி அலுவலர் நாகேஸ்வரி மற்றும் ராதாகிருஷ்ணன் செய்திருந்தனர்.

## முட்டை விலை சென்னையில் உயர்வு :வடமாநிலங்களில் பனிப்பொழிவு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,21:28 IST

சென்னை : பனிப்பொழிவு வடமாநிலங்களில் நீடிப்பதால் கோழி முட்டைகளின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் சென்னையில் முட்டை விலை அதிகரித்துள்ளது. தமிழகத்தில், 3 கோடி கோழி முட்டைகள் நாளொன்றுக்கு சராசரியாக உற்பத்தி
செய்யப்படுகின்றன.
இதில் சென்னையில் மட்டும் 55 முதல் 60 லட்சம் வரை விற்கப்படுகின்றன.
வடமாநில விற்பனை
தமிழக முட்டை ஆந்திரா, டில்லி, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், காஷ்மீர், அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.
தமிழகத்தில் புரட்டாசி மாதம், சபரிமலை சீசன் போன்ற காரணங்களால் முட்டைகள் விற்பனை சற்று மந்தமடையும் போது, வட மாநிலங்களில் கோழி முட்டைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.
அதே போல வடமாநிலங்களில் வெயில் காலங்
களில் முட்டை விற்பனை சற்று மந்தமடையும் சமயங்களில் தமிழகத்தில் முட்டைக்கான தேவை அதிக
மாகும்.
இதனால் தமிழகத்தில் உற்பத்தியும், விற்பனையும் சம நிலையில் காணப்படுகிறது.
பனிப்பொழிவு குறையவில்லை
வடமாநிலங்களில் பிப்ரவரியில் பனிப்பொழிவு குறைய ஆரம்பித்து வெயில் தீவிரமாகும். அதனால் அந்த காலத்தில் முட்டை தேவை குறைவாக இருக்கும். ஆனால் இந்த வருடம் பிப்ரவரி

மாதத்திலும் பனிப்
பொழிவுக் குறையவில்லை.
இப்போதும் பனி பெய்து வருவதால் கோழி முட்டைக்கு அங்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.
இதனால் 10 முதல் 15 சதவீதம் வரை கூடுதலாக வட மாநிலங்களுக்கு முட்டை அனுப்பப்படுகிறது.

தேவை அதிகரிப்பு

இந்நிலையில் தமிழகத்தில் முட்டைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.
பொதுவாக முட்டைகள் உற்பத்தியில் தேக்கமடையும் போது, அவை விலை குறைந்தும், தேவை அதிகளவில் இருக்கும் போது விலை அதிகரித்தும் காணப்படும்.
தற்போது முட்டைகளுக்கு வட மாநிலங்களில் வரவேற்புள்ளதால் தமிழகத்தில் அவற்றின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.
இதனால் கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை மொத்த விற்பனை நிலையங்களில் சாதாரணமாக 2.50 ரூபாய் வரையிலும், சில்லறைக் கடைகளில் 2.75 ரூபாய் வரை விற்பனையாகிக் கொண்டிருந்தன.
தற்போது முட்டை மொத்த விற்பனைக் கடைகளில் ரூ.2.92 வரையிலும் சில்லறைக் கடைகளில் ரூ.3.25 வரை விலையுள்ளது.
தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் கழக தென் மண்டல தலைவர் மோகனரெட்டி கூறும் போது, 'மார்ச் மாதம் தொடங்கிய பின்னர் தான் முட்டை விலை மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதனால் இன்னும் சில நாட்களுக்கு, இந்த நிலை தான் காணப்படும்' என்றார்.

## பயறு வகை விதை உற்பத்திக்கான விவசாயிகள் பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,23:01 IST

கருத்தை பதிவு செய்ய

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை துறை மூலம் 2011-2012 ஆண்டின் விதை கிராம திட்டத்தில் கிள்ளையில் பயறு வகை விதை உற்பத்திற்கான விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது.
பேரூராட்சித் தலைவர் வித்யாதித்தன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் மதிவாணன் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் பொன்கிருஷ்ணன், வேளாண்மை துறையின் திட்டங்கள் பற்றியும், விதை உற்பத்திற்கான தொழில் நுட்பங்கள் பற்றியும் பேசினார். மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி பற்றி வேளாண் அலுவலர் செல்லதுரை பேசினார்.
முகாமில் முன்னோடி விவசாயிகள் கற்பனைச்செல்வம், பாஸ்கர், ராஜாராம், கிருஷ்ணமூர்த்தி

உட்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன் செய்திருந்தார்.உதவி வேளாண்மை அலுவலர் பிரான்சிஸ் நன்றி கூறினார்.

## தானே புயலால் மஞ்சள் மகசூல் பாதிப்பு: மாற்றுபயிருக்கு மாற விவசாயிகள் முடிவு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,23:17 IST

கருத்தை பதிவு செய்ய

தியாகதுருகம் : "தானே' புயலால் மஞ்சள் செடிகள் மண்ணில் சாய்ந்து அழுகி மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நிலங்களில் மஞ்சள் சாகுபடிக்கு ஏற்ற சூழல் அமைந்துள்ளது. இதனால் ஆண்டுதோறும் மஞ்சள் சாகுபடி செய்வதில் குறிப்பிட்ட விவசாயிகள் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆண்டு பயிராக மஞ்சள் உள்ளதால் நிகர லாபம் ஈட்டி வந்தனர். மஞ்சள் சாகுபடி செய்ய நிலத்தை உழுது சாண எருவை இட்டு நிலம் பண்படுத்தபடுகிறது. அதில் சாணக் கரைசலில் ஊறவைத்த மஞ்சள் கிழங்கு நடவு செய்யப்படுகிறது.

செடிகள் வளரும்போது முளைக்கும் களைகளை நீக்கி, தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சி ஊட்டச்சத்து உரங்களை இட்டு பராமரிக்க வேண்டும். இதனால் செடிகளின் வேர்களில் அதிகளவில் கிழங்குகள் உற்பத்தியாகி பருத்து வளர்கிறது. கிழங்குகளுக்கு முற்றியதும் நீர்பாய்ச்சுவது நிறுத்தப்படுகிறது.

அதன்பின் செடிகள் காய்ந்து மண்ணில் சருகாக சாய்ந்த பின் மண்ணை வெட்டி அதில் உள்ள மஞ்சள் கிழங்கை எடுக்கின்றனர். கிழங்கில் ஒட்டியுள்ள மண்ணை அப்புறப்படுத்தி அதனை தரம் பிரிக்க வேண்டும். அவற்றை பெரிய கொப்பரையில் இட்டு வேகவைத்து 10 நாட்கள் உலர வைக்க வேண்டும்.

அதன்பின் இயந்திரத்தில் போட்டு "பாலிஷ்' செய்யப்படுகிறது. இதனால் கிழங்கின் மீது இருந்த வேர்கள் அகற்றப்பட்டு மேற்புறம் பளபளப்பாக மஞ்சள் நிறமாக மாறுகிறது.

இதன் பின்னரே இதனை விற்பனைக்கு எடுத்து செல்ல முடியும். இத்தனை சிக்கல் இருந்தாலும் மஞ்சள் சாகுபடி மூலம் ஆண்டுதோறும் நிகர லாபம் ஈட்டிவரும் விவசாயிகள் தொடர்ந்து மஞ்சள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வந்தனர். கடந்த டிச., 30ம் தேதி வீசிய "தானே' புயலில் மாவட்டத்தில் விளை பொருட்கள் பெருமளவு பாதிக்கப்பட்டது. மஞ்சள் செடிகள் மண்ணில் சாய்ந்து சேதமடைந்தது.

கிழங்கு முற்றும் தறுவாயில் செடிகள் மண்ணில் சாய்ந்து அழுகியதால் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் கிழங்கு பருத்து வளராததால் அறுவடை செய்து பதப்படுத்தும் போது, போதிய தரமின்றி எதிர்பார்த்த விலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள்

கவலையுடன் தெரிவிக்கின்றனர்.இதனால் இவ்வாண்டு மாற்று பயிரிக்கு மாற விவசாயிகள் பலரும் முடிவு செய்துள்ளனர்.

## கால்நடைகளுக்கு விலையில்லா தீவனம் வழங்கவேண்டும்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,23:55 IST

கிருஷ்ணகிரி: ""கால்நடைகளுக்கு விலையில்லா தீவனம் வழங்க வேண்டும் என்றும், மற்ற மாநிலங்களில் வழங்கப்படுவது போல் பால் கொள்முதல் மானியத்தை தமிழகத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும்,'' என தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் சிவசாமி தெரிவித்துள்ளார்.

"கால்நடைகளுக்கு விலையில்லா தீவனத்தை அரசு வழங்க வேண்டும்' என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழக பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கிருஷ்ணகிரி புதிய பஸ் ஸ்டாண்ட் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். மாவட்ட பொது செயலாளர் சுந்தரரேசன், மாவட்ட தலைவர் வேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் சிவசாமி கோரிக்கைகள் குறித்து பேசினார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் மின் விநியோகத்தை ஒழுங்குபடுத்த, விவசாயத்துக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். மின்வெட்டு தொடர்ந்தால் உணவு உற்பத்தி குறையும் அபாயம் ஏற்படும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் கொள்முதல் மானியமாக வழங்கப்படுகிறது. இதே போல் தமிழகத்திலும் பால் உற்பத்தியாளர்களுக்கு கொள் முதல் மானியம் வழங்க வேண்டும்.

தமிழக அரசு வழங்கும் விலையில்லா பசுமாட்டின் பயணாளிகள் மிகவும் குறைவு. ஆகவே அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் பயன் அடையும் வகையில் கால்நடைகளுக்கு விலையில்லா தீவனத்தை அரசு வழங்க வேண்டும்.

தனியார் விற்பனை செய்யும் கால்நடை தீவனத்தின் விலையை அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விலையை உடனடியாக குறைக்க நடவடக்கை எடுக்க வேண்டும். கிராம பால் கூட்டுறவு சங்கங்களுக்கு மார்ஜின் தொகையை 50 பைசாவில் இருந்து உயர்த்தி 3 ரூபாயாக வழங்க வேண்டும்.

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கர்நாடகா அரசு பெங்களூருவில் இருந்து கே.ஜி.எப்.,க்கு 120 ஏரிகளுக்கு பாசனம் செய்வதற்கு 45 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வர முயற்சி செய்கிறது.

இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தால் தமிழகத்தில் தென்பெண்ணை ஆற்று பாசனம் மூலம் மேற்கொண்டு வரும் விவசாயம் கேள்விக்குறியாகிவிடும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள

மின்வெட்டை சரி செய்ய 10 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன்கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையங்களை அரசு தொடங்க வேண்டும். மின்வெட்டை உடனடியாக தடுக்க கூடங்குளம் அணு மின் நிலையத்தியில் மின்சார உற்பத்தியை துவங்க வேண்டும்.
இவ்வாறு கூறினார்.
மேற்கு மாவட்ட தலைவர் வண்ணப்பா, பொருளாளர் சுப்பிரமணிரெட்டி, கிழக்கு மாவட்ட தலைவர் தேவேந்திரன். மாவட்ட துனை தலைவர்கள் பெருமாள், கிருஷ்ணன், கோனப்பன், இளைஞர் அணி செயலாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பொருளாளர் அசோக்குமார் நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 29,2012,23:55 IST

ஓசூர்: "கிருஷ்ணகிரி மாவட்ட உழவர் சந்தை விவசாயிகளுக்கு போச்சம்பள்ளியில் காய்கறிகள் விற்பனை செய்ய புதிய அறுவடை தொழில் நுட்ப வணிக பயிற்சி அளிக்கப்பட்டது,' என ஓசூர் உழவர் சந்தை அலுவலர் மேகநாதன் தெரிவித்தார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் போச்சம்பள்ளி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மாவட்ட உழவர் சந்தை விவசாயிகளுக்கு வணிகப்பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண் துணை இயக்குனர், வேளாண் துறை செயல்பாடுகள், திட்டங்கள், விவசாயிகள் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்து கூறினார்.
காய்கறிகள் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய நேர்த்தி முறைகள், பயிற்சி குழுக்கள் அமைத்தல், புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் விளை பொருட்களை இடைத்தரர்கள் குறுக்கீடு இன்றி விவசாயிகளே நேரடியாக பொதுமக்களிடம் விற்பனை செய்தல், பொருட்களை தரம்பிரித்தல், மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக சந்தைப்படுத்தி கூடுதலான விலைக்கு விற்பனை செய்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து அதிகாரிகள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி பரசுராமன் கலந்து கொண்டு விதைகளை கடினப்படுத்தி விதைத்தல், மானாவாரி பயிர்களுக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்து இடுவதின் மூலம் கிடைக்கும் மகசூல், நன்மைகள் குறித்து விளக்கு கூறினார்.அதன் பின் வேளாண் உதவி இயக்குனர்கள் சுகுமார், குணசேகரன் ஆகியோர், உழவர்பாதுகாப்பு திட்டம், பொருளீட்டு கடன் வழங்குதல் மற்றும் அன்றாடம் சந்தையில் நிலவும் விலை விபரங்களை தாங்கள் விரும்பும் பயிருக்கு மொபைல்ஃபோனில் இலவசமாக தெரிந்து கொள்ளுதல் பற்றி எடுத்துரைத்தனர்.ஓசூர் உழவர்சந்தை வேளாண் அலுவலர் மேகநாதன், உதவி வேளாண் அலுவலர்கள் மாரிமுத்து, நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.